பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 08 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்துவது குறித்த மத்திய அமைச்சரவை முடிவு காரணமாக 6 மாநிலங்கள் பெரிதும் பயன் அடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் தொலைதொடர்பு கட்டமைப்புகள் பெரிதும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் நம்பகமானவை என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- மியான்மரில் நான்கரை ஆண்டுகளுக்கு பிறகு அவசர நிலை அகற்றப்பட்டு இடைக்கால அரசு அமைக்கப்படுவதாக அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது.
- பிரேசிலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மணிகா பத்ரா – ஸ்வஸ்திகா கோஷ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்துவது குறித்த மத்திய அமைச்சரவை முடிவு காரணமாக 6 மாநிலங்கள் பெரிதும் பயன் அடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகக் கூறியுள்ளார்.

இதற்கு ஊக்கமளிக்கும் வகையில் 4 பெரிய திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

11 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலா இத்திட்டங்களால் மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், பீஹார், ஒடிசா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்கள் பெரிதும் பயனடையும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் ரயில்வே உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் இது முக்கியமான நடவடிக்கை என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் தொலைதொடர்பு கட்டமைப்புகள் பெரிதும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கைப்பேசி உற்பத்தி தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், தொலைதூர கிராமங்களிலும் நவீன தொலைதொடர்பு வசதிகள் தற்போது கிடைப்பதாக தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 120 கோடி கைப்பேசி இணைப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

மொபைல் இணையதள சேவைக்கான தரவுக் கட்டணம் இந்தியாவில் குறைவாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் 99 புள்ளி 6 சதவீத மாவட்டங்களில் தற்போது 5-ஜி சேவை கிடைப்பதாக திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா குறிப்பிட்டார்.

<<<<>>>>

மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் நம்பகமானவை என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மகாராஷ்டிராவில் கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலின்போது **VVPAT** இயந்திரங்களில் பதிவான சீட்டுகளின் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டபோது துல்லியமாக இருந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

10 தொகுதிகளில் பதிவான வாக்குகள் குறிப்பிட்ட அளவில் உத்தேசமாக சரிபார்க்கப்பட்டதாக ஆணையம் கூறியுள்ளது

<<<<>>>>

அமெரிக்க அதிபர் அறிவித்த 25 சதவீத வரி விதிப்பால் இந்தியாவில் 60 பில்லியன் டாலர் சந்தை சரிவடைந்ததாக பாகிஸ்தான் பரப்பிய தகவல்களை இந்தியா மறுத்துள்ளது.

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மை கண்டறியும் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் எந்த நிதி அவசர நிலையும் அறிவிக்கப்படவில்லை என விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மியான்மரில் நான்கரை ஆண்டுகளுக்கு பிறகு அவசர நிலை அகற்றப்பட்டு இடைக்கால அரசு அமைக்கப்படுவதாக அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தலை நடத்த ஏதுவாக அவசர நிலை திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ராணுவம் கூறியுள்ளது.

திரு. **Nyo** இடைக்கால பிரதமராக செயல்படுவார் என்று மியான்மர் அரசின் வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் அறிவித்துள்ளன.

தேசிய பாதுகாப்பு ஆணையத்தின் தலைவராகவும், அதிபராகவும் ராணுவ தலைமைத் தளபதி திரு. **Myn Long** தொடர்ந்து செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை 40 லட்சத்து 98 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

தமிழகத்தில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசின் ஜவுளித்துறை சார்பில் சமர்த் திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது இப்பகுதி மக்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக இத்திட்ட ஒருங்கிணைப்பாளர் எமது செய்தியாளரிடம் கூறினார்.

இத்திட்டத்தால் தங்களது வாழ்வாதாரம் உயர்ந்துள்ளதாக இதில் பயன்பெற்றவர்கள் தெரிவித்தனர்.

<<<<>>>>

மத்திய அரசின் லட்சாதிபதி சகோதரிகள் திட்டம் தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தபட்டு வருகிறது.

இத்திட்டம் தொடர்பான முகாம்கள் செப்டம்பர் மாதம் வரை நடைபெறுவதாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு. தனராஜ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இத்திட்டம் தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக இதில் பயனடைந்த பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரேசிலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மணிகா பத்ரா – ஸ்வஸ்திகா கோஷ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 12-10, 11-8, 3-11, 11-9 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Diya Chitale – Yashaswini Ghorpade** இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Payas Jain – Ankur Bhatacharjee** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>